# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 63/8— 1979 නොවැම්බර් 21 වැනි බදාදා — 1979.11.21

63/8 ஆம் இலக்கம்—1979 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

145 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 145 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, உயர்கல்வி அமைச்சர் நிசங்கா பராக்கிரம விஜேரத்ன ஆகிய யான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மேல், இக்கட்டளை மூலம் பின்வருமாறு அதிகாரமளிக்கிறேன் :—

(i) இதற்கான அட்டவணையின் I ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ளதும், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளதென அத்தகைய சட்டத்தின் 139 ஆம் பிரிவினால் கருதப்படுவதுமான பல்கலைக்கழகம் ஒவ்வொன்றும், அத்தகைய அட்டவணையின் II ஆம் நிரையின் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழக வளாகத்தின் மாணவர்களாக இருந்தவர்களும், அத்துடன் 1979 திசம்பர் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் பட்டங்கள், டிப்புளோமாக்கள், வேறு கல்விச் சிறப்புகள் என்பவற்றுக்காக விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகளில் தேறியவர்களும் அவற்றுக்கான மற்றெல்லாத் தேவைப்பாடுகளையும் திருத்திசெய்தவர்களுமான ஆட்களுக்கு, சொல்லப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகத்தின் சார்பிலும் அது தொடர்பிலும் பட்டங்களையும், டிப்புளோமாக்களையும் வேறு கல்விச் சிறப்புகளையும் வழங்குவதற்கும் சூட்டுவதற்கும் ; அத்துடன்

(ii) அத்தகைய அட்டவணையின் I ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகம் ஒவ்வொன்றினதும் துணைவேந்தரும் பதிவாளரும், பந்தி (i) இன் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு வழங்கப்படவுள்ள பட்டங்களிலும், டிப்புளோமாக்களிலும் வேறு சான்றிதழ்களிலும் சொல்லப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகத்தின் சார்பிலும் அது தொடர்பிலும் கையொப்பமிடுவதற்கும்.

நிசங்கா விஜேரத்ன,
உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
21 நொவெம்பர், 1979.

அட்டவணை

| நிரை I | நிரை II |
|---|---|
| கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை | கொழும்பு |
| பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை | பேராதனை |
| சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், இலங்கை | வித்தியோதய |
| களனி பல்கலைக்கழகம், இலங்கை | வித்தியாலங்கார |
| மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை | கட்டுபெத்தை |
| யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை | யாழ்ப்பாணம் |